LIBRARY A.M. COLLEGE

யா/உடுப்பிட்டி

# அமெரிக்கன் மிஷன் கல்லூரி

வல்வெட்டித்துறை.

# பரிசளிப்பு விழா - 2010



# அதிபர் அறிக்கை

# அதிபர் அறிக்கை

எமது கல்லூரித் தாயின் 2010ம் ஆண்டின் பரிசில் தின விழாவிற்கு வருகை தந்திருக்கும் பெருமதிப்பிற்கும், கௌரவத்திற்கும், அன்பிற்கும் உரிய முதன்மை விருந்தினர், கல்விப் புலமையாளர் வடமராட்சி கல்வி வலயத்தின் பணிப்பாளர் உயர் திரு. வ. செல்வராசா அவர்களே!, சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களே, வணக்கத்துக்குரிய மதகுருமார்களே!, பிரதிக்கல்விப் பணிப்பாளர்களே! உதவிக் கல்விப் பணிப்பாளர்களே!, ஒளிச்சுடராய் திகழும் பல்வேறு கல்லூரிகளின் அதிபர்களே! மாணவப் பாறைகளைச் செதுக்கும் ஆசிரியச் சிற்பிகளே, பாசமழை பொழியும் மேகமாகிய பெற்றோர்களே! விழுதாய் அமைந்த பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரே! வேராய்த் திகழும் பழைய மாணவ சங்கத்தினரே! மூன்றாம் பிறைபோல் வீற்றிருந்து எதிர்காலத்தில் பௌர்ணமியாக முழுமையடையத் தவமிருக்கும் மாணவர்களே! நிமிர்ந்து நிற்கும் நிறுவனங்களின் இயக்குனர்களே! நலன் விரும்பிகளே! உங்கள் அனைவருக்கும் இதயம் நெகிழ்ந்த இனிய மாலைப் பொழுதிலே எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈழத்திருநாட்டின் சிரமென மிளிரும் யாழ் நகருக்கு தலைமைச் செயலகமான மூளையாகத் திகழ்வது வடமராட்சியாகும். இத்தகு புலமைப்புலமான மண்ணுக்கு வலயக்கல்விப் பணிப்பாளராக விளங்குகின்ற திரு. வ. செல்வராசா அவர்கள் எமது கல்லூரியின் பரிசில் தின விழாவிற்கு முதன்மை அதிதியாகக் கலந்து சிறப்பிப்பதனையிட்டு கல்லூரிச் சமூகம் புளகாங்கிதம் அடைகிறது.

புதிய விடியலொன்றில் பூத்துக்குலுங்கும் இந் நாள் பூமியின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய திருநாளாகும். அறிவுத்தேடலும் நம்பிக்கை நாடலும் சிந்தனா கூடமும், வாழ்வியற்பாடமாகக் கொண்ட பண்பாளராகவே திரு. வ. செல்வராசா

அவர்களை சரித்திரத்தின் பக்கங்களில் சாசனம் வெளிப்படுத்தி நிற்கிறது. விடா முயற்சியும் நேர்மையின் பயிற்சியும் எல்லையற்ற உயர்ச்சியை ஈட்டுமென்பதை திரும்பிய திசை எங்கும் பொறித்து வைத்த பெருமகனாகவே அவரை இனங்காண்கின்றோம்.

யா/கட்டைவேலி மெ.மி.த.க. பாடசாலையிலே ஆரம்பக் கல்வியினைக் கற்றுத் தேர்ந்து அறிஞர்களின் பாசறையாகத் திகழும் யா/விக்னேஸ்வரக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியினைப் பெற்றுக் கொண்டார். க. பொ. த. உயர்தரக் கல்வியினை யா/ஞானசாரியார் கல்லூரியில் கற்றுத் தேர்ந்தார். இவர் வருகைக்காகத் தவமிருந்த பேராதனைப் பல்கலைக்கழகம் தன் தவத்தின் பயனை 1974இல் அடைந்தது. அறிவின் ஆராதனையை பேராதனையில் நிகழ்த்தி வணிகத் துறையில் சிறப்புப் பட்டதாரியானார். தொடர்ந்து 1981ம் ஆண்டுவரையிலும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே வணிகத்துறையில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

கல்வியின் நவீன போக்குகளையும் அறிவுக் கருவூலங்களையும் தன்னகத்தே தக்கவைத்துக் கொள்ளும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பான கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணி போன்ற பட்டங்களை வென்றெடுத்தார்.

தனிச்சுடர் விடும் சூரியனைவிட இன்னொரு விளக்கினை ஏற்றுகின்ற அகல்விளக்கு ஆயிரம் மடங்கு சிறந்தது என்பதை உணர்ந்து ஆசிரிய சேவையிலே தன் பாதையினைத் தொடர்ந்தார். யா/ஓட்டமாவடி மகாவித்தியாலயம், வவுனியா நெடுங்கேணி மகாவித்தியாலயம், யா/வல்வை மகளிர் மகாவித்தியாலயம் என்பனவற்றிலே கல்விச் சுடர் ஏற்றும் ஆசிரிய தீபமாக சிகரம் தொட்டார். 1991ம் ஆண்டு பேரறிஞர்களின் தாயகமாகத் திகழும் யா/விக்னேஸ்வரக் கல்லூரிக்கு முதல்வராகப் பொறுப்பேற்றார். குறுங்கால சேவையாக அமைந்தாலும் குன்றிலிட்ட தீபமென அக்கல்லூரியை குவலயத்திற்கு இனங்காட்டினார். தொடர்ந்து மருதங்கேணி, கரவெட்டி கோட்டக்கல்வி அலுவலகங்களில் கோட்டக்கல்வி அலுவலராகச் சேவையாற்றினார்.

வீணை கையிலே ஏந்திய வாணியின் ஆணையால் தேனை ஒத்த தெவிட்டாத தமிழன்னை 1998ம் ஆண்டு இவரை தென்மராட்சியின் வலயக் கல்விப் பணிப்பாளராக்கி மகுடம் சூட்டினாள். 2005 இலே தான் இன்னொரு ஜனனம், நம் வடமராட்சி மண்ணுக்கு நிகழ்ந்தது. ஆம் வடமராட்சி மண் புதிதாகப் பிறந்தது. திரு. வ. செல்வராசா வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக அமைந்து எங்கள் இதயங்களைக் குளிர்வித்தார். பெருமைக்கும் பேரறத்திற்கும் பொறுமைக்கும் அறிவின் உரிமைக்கும் ஏக புதல்வனாக அமைந்த எங்கள் கல்விப் பணிப்பாளர் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாக வேரோடி விழுதெறிந்த கல்லூரி ஆலமரத்தின் பரிசில் தின நிகழ்வில் கலந்து கொண்டதை இறைவன் கொடுத்த கொடையாக ஏற்றுக் கொள்கிறேன்.

பரிசில் தின விழாவில் கலந்து கல்லூரி அன்னையின் இதயக் கமலத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் சிறப்பு விருந்தினர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இரண்டாம் சூரியனாய் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு ஒளியூட்டியவர். பற்று மிகுந்த பழைய மாணவராக அமைந்து எமது கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு அருந்தொண்டாற்றியவர். நளினமான அசைவுகளை நாடக ஆற்றுகைகளில் வெளிப்படுத்தியவர். மொழிவன்மை மிக்கவராகத் திகழ்ந்து மேடைகளில் பேச்சாற்றலை இனங்காட்டியவர். பல்வேறு கல்லூரிகளுக்கு நிதி வழங்கி அக்கல்லூரிகளின் ஆளுமைப்பண்பு விருத்தியடைவதில் பெரும்பங்காற்றியவர். சமூக சிந்தனை மிகுந்த பல்வேறு சமூக சேவைகளை காத்திரமாகவே புரிந்தவர். எமது கல்லூரியின் மேம்பாட்டில் அதிக கவனம் செலுத்தி வளங்களின் பற்றாக்குறையை ஆய்ந்து ஆவனசெய்யும் செயற்பாடுகளில் முதன்மை வகிப்பவர். திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இந் நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டு நெஞ்சம் நெகிழ்ந்து நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போதைய உலகப் போக்கிற்கு அமைவாக எமது கல்லூரியின் கல்வித்தரத்தை முன்னோக்கி எடுத்துச்செல்லவேண்டிய

நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது. அதற்கான செயற்பாடுகளிலே கல்லூரிக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து பலர் பங்காற்றிக் கொண்டிருக்கின்றனர் என்பது பாராட்டுக்குரிய விடயமாகும். எமது கல்விப் பணிப்பாளரும், அவரது ஆளணியினரதும் செயற்பாடுகள் கல்வித்தரத்தை முன்னெடுப்பதில் மெச்சத்தக்கவையாகும். எமது கல்லூரியின் தேவைகளை அவ்வப்போது இனங்கண்டு கல்லூரியின் பழைய மாணவர் தாய்ச் சங்கத்தினூடாக கேட்டறிந்து கொழும்பு, கனடா, சுவிஸ், இங்கிலாந்து போன்ற இடங்களிலுள்ள எமது சங்கத்தினர் பெரும் பங்களிப்பைச் செய்வது பாராட்டுக்குரியதாகும். எமது சங்கத்தின் சர்வதேசப் பிரதிநிதிகள் கலாநிதி த. வசந்தகுமார், திரு. சி. கணபதிப்பிள்ளை ஆகியோர் அடிக்கடி என்னிடம் தொடர்புகொண்டு தேவைகளை நிறைவேற்றுதல் மிகவும் சிறப்பான ஒரு விடயமாகும்.

இங்கிலாந்தில் வாழ்ந்துகொண்டு பல நல்ல விடயங்களிற்கு உதவிகள் செய்துகொண்டு இருக்கின்ற யா/ஹாட்லிக் கல்லூரியின் பழையமாணவனும், எனது நெருங்கிய நண்பனுமாகிய திரு. சின்னையா தங்கவேல் அவர்கள் 25 வருடங்களின் பின் என்னைச் சந்திக்க வந்தபொழுது கல்லூரியின் கல்வி அபிவிருத்திக்காக ஒரு லட்சம் ரூபாய் தந்தது ஒரு சிறப்பான விடயமாகும். கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எமது கல்லூரியின் பழைய மாணவன் திரு. செல்லையா பாலசுந்தரம் குடும்பத்தினர் கல்வி அபிவிருத்திக்காக ஒரு லட்சம் ரூபாய் தந்ததோடு, எமது மாணவர்களின் அடிப்படைத் தேவையான நீர் வசதிக்காக ஒரு குழாய்க் கிணறு காளிகோயில் வீதியில் (கோயிலின் தேவையும் கருதி) அமைத்துத் தந்துள்ளார். அவருக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு இதற்கு காணியைத் தந்துதவிய திரு. அருணாசலம் கருணைவேல் அவர்களுக்கும் உந்து சக்தியாக செயற்பட்ட செல்லையா தயானந்தன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். திரு. வே. ஞானேஸ்வரன் அவர்கள் தனது தந்தையார் பண்டிதர் வேலுப்பிள்ளை அறக்கட்டளை நினைவாக உயர்தரப்பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு அவர்களின் கல்வி இடையூறு இன்றித் தொடர்வதற்கு வழங்கப்படும் நிதியம் ஒன்றை உருவாக்கிச் செயற்படுத்திவருவதனை நன்றியறிதலுடன் வரவேற்கின்றேன்.

## மாணவர் விபரம்

| | |
|---|---|
| ஆரம்பப் பிரிவு | 281 |
| இடைநிலைப் பிரிவு | 478 |
| உயர்தரப் பிரிவு | 315 |
| மொத்தம் | 1 074 |

## ஆளணி விபரம்

| | |
|---|---|
| பட்டதாரி ஆசிரியர்கள் | 25 |
| பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் | 29 |
| பயிற்சி பெறாத ஆசிரியர்கள் | 01 |
| உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் | 02 |
| கல்வி சாரா அலுவலர்கள் | 02 |

## புதிதாக ஆளணியில் இணைந்தவர்கள்

01. திருமதி. சு. பிரபாகரன்
02. செல்வி. அ. ஜெயரதி
03. திரு. த. செல்வமுரளி
04. திரு. ப. ஜெயகாந்தன்
05. திரு. க. சிவம்
06. திரு. என் . மகேந்திரராசா
07. திருமதி. கீ. கிரிதரன்
08. திருமதி. மே. இரட்ணராஜா
09. திரு. கே. பாக்கியநாதன்
10. திருமதி க. யோகேஸ்வரன்
11. திருமதி. சி. சச்சிதானந்தம்

## தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியர்கள்

01. திரு. த. பிரதாப்
02. திரு. த. மங்களரூபன்
03. செல்வி கே. இன்பவதனி

04. திருமதி. ம. பூலோகசிங்கம்

05. திரு. எஸ். கிருபாகரன்

06. திரு. வே. பிரபாகரன்

## பற்றாக்குறை ஆளணி விபரம்

| | |
|---|---|
| தமிழ் | - 01 |
| சங்கீதம் | - 01 |
| சித்திரம் | - 01 |
| ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் | - 03 |
| கல்வி சாரா அலுவலர்கள் | - 05 |

## கல்லூரி எதிர்நோக்கும் இடர்கள்

01. நிரந்தரமான குடிநீர் வசதி இல்லாமை.
02. ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு வகுப்புக்களிற்கு போதிய வகுப்பறைகள் இல்லாமை.
03. நிர்வாக ஒழுங்குகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்காக வசதிகள் கொண்ட காரியாலயம் இன்மை.
04. ஆய்வு கூடங்களில் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான உபகரணங்கள், பொருட்கள் பற்றாக்குறை.
05. மாணவர்களின் பயன்பாட்டிற்கு போதியளவு கணனிகள் இல்லாமை.

## கல்விச் செயற்பாடுகள்

எமது கல்லூரிக்கு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை அவதானிக்கும் பொழுது ஓரளவு திருப்பதிகரமானதாகவே உள்ளது.

## 2009 ம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள்

01. செல்வன் தவநிலவின்தாசன் துளசிராம்

02. செல்வன் குலேஸ்வரன் ஜான்சன்

## 2009ம் ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சையில் அதிசிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள்

01. செல்வன் ஜெயதேவா குகப்பிரஷாந் (தமிழ்மொழிமூலம்)

02. செல்வன் திருவாதவூரர் கோபிராஜ் (ஆங்கிலமொழிமூலம்)

உயர்தரம் கற்பதற்கு தகுதிபெற்ற மாணவர்கள் - 40

## 2009ம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சைச் சித்திகள்

தோற்றியோர் எண்ணிக்கை 89

பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் தொகை 68

## அதிசிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள்

**கணிதத்துறை**

| | |
|---|---|
| செல்வன் சி. சஞ்ஜெய் | 3 A |
| செல்வன் த. கிரிதரன் | 2B C |
| செல்வன் உ. சஜிந்தன் | B 2C |

**விஞ்ஞானத்துறை**

| | |
|---|---|
| செல்வன் கு. சஜீவன் | A 2B |

**வர்த்தகத் துறை**

| | |
|---|---|
| செல்வன் க. குபேந்திரன் | 2A B |

### கலைத் துறை

| | |
|---|---|
| செல்வன் அ. செ. டைசன் கமிலஸ் | 3 A |
| செல்வி. கி. தாமிரா | 3 A |
| செல்வி ச. கல்யாணகுமாரி | 3 A |
| செல்வி ப. சுபத்திரா | 3 A |
| செல்வன் க. பிரசாந்த் | 2A B |
| செல்வன் த. பிறவுண்சன் | 2A B |
| செல்வன் க. துஷேன் | 2A B |
| செல்வி ஜெ. சசிரேகா | A 2B |
| செல்வி ப. இரசானி | 2A C |
| செல்வன் த. கோவர்த்தனன் | A 2B |

## க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பாடரீதியான சித்திவீதம்

| பாடம் | சித்தி வீதம் % |
|---|---|
| 01. பௌதிகவியல் | 50 |
| 02. இரசாயனவியல் | 33 |
| 03. இணைந்த கணிதம் | 44 |
| 04. உயிரியல் | 100 |
| 05. அளவையியலும் விஞ்ஞானமுறையும் | 93 |
| 06. புவியியல் | 100 |
| 07. நாடகமும் அரங்கியலும் | 100 |
| 08. இந்துநாகரீகம் | 100 |
| 09. தமிழ் | 97 |
| 10. சித்திரம் | 100 |
| 11. கணக்கீடு | 100 |
| 12. வணிகக் கல்வி | 100 |
| 13. பொருளியல் | 100 |
| 14. கர்நாடக சங்கீதம் | 100 |
| 15 கிறிஸ்தவம் | 100 |

## வலய மட்ட சாதனைகள்

### கணித வினாடிவினாப் போட்டி
செல்வன் ஜெ. ராஜேந்தர்

### விஞ்ஞான வினாடிவினாப் போட்டி
செல்வன் தி. கோபிராஜ்

### தமிழ்த்தினப் போட்டி
செல்வன் த. துவாரகன் (இசை தனி)

## இணைப்பாட விதான செயற்பாடுகள்

### விளையாட்டுத்துறை

கடந்த காலங்களில் எமது கல்லூரி விளையாட்டுத் துறையில் மாவட்டம், மாகாணம், தேசிய மட்டங்களில் பங்குபற்றி பல சாதனைகளை நிலைநாட்டியமை குறிப்பிடத்தக்கது. எமது கல்லூரி பெரு விளையாட்டுக்களில் குறிப்பாக கரப்பந்தாட்டத்தில் மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் தொடர்ச்சியாகப் பங்குபற்றி வருவது பாராட்டப்படக்கூடிய ஒன்றாகும். எமது கல்லூரியின் விளையாட்டுத்துறை சாதனைகளுக்கு சான்றாக இவ்வருடம் (2010 இல்) 15, 19 வயது கரப்பந்தாட்டம் 15 வயது அஞ்சல் ஓட்ட அணிகள் தேசிய மட்டத்தில் பங்குபற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இருந்தும் எமது கல்லூரியின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு நிதிப்பற்றாக்குறை ஒரு பெரும் இடையூறாகவுள்ளது. ஆகவே விளையாட்டுத்துறையானது மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டுமெனில் நிதிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யப் படவேண்டிய தொன்றாகும். இதன் மூலம் கல்லூரி பல்வேறு சாதனைகளை நிலைநாட்டுவது உறுதியானதாகும்.

## உதைபந்தாட்டம்

பொறுப்பாசிரியர் : திரு. ச. செல்வகுமரன்
பயிற்றுநர் : திரு. த. விஜிந்தன்

2008 பிற்பகுதியில் வலய மட்டத்தில் 19 வயதுப் பிரிவு 3ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. 13, 15 வயதுப் பிரிவுகள் மாவட்ட மட்டத்தில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## கரப்பந்தாட்டம்

பொறுப்பாசிரியர் : திரு. ச. செல்வகுமரன்
பயிற்றுநர் : திரு. த. நிருஷாந்

2008 பிற்பகுதியில் வலயமட்டத்தில் 15, 17, 19 வயதுப் பிரிவுகள் 1ம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 19 வயதுப் பிரிவு 3ம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. அத்துடன் **D.S.I** நிறுவனம் நடாத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மாவட்டமட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## கடினபந்துத் துடுப்பாட்டம்

பொறுப்பாசிரியர் : திரு. சி. நாகேந்திரன்
பயிற்றுநர் : திரு. ஞா. ஞானதயாளன்

13, 15 வயதுப் பிரிவுகள் மாவட்ட மட்டத்தில் பங்குபற்றி காலிறுதிவரை விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

## கல்லூரியின் சிறந்த கரப்பந்தாட்ட வீரர்களின் விபரம்

15 வயதுப்பிரிவு : செல்வன் க. தருஷன்
17 வயதுப் பிரிவு : செல்வன் இ. தர்சிகன்
19 வயதுப்பிரிவு : செல்வன் அ. உஷானந்

## கல்லூரியின் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களின் விபரம்

| | |
|---|---|
| 13 வயதுப் பிரிவு | : செல்வன் ச. ரமிலன் |
| 15 வயதுப்பிரிவு | : செல்வன் பி. அபிஷேகர் |
| 17 வயதுப் பிரிவு | : செல்வன் ற. நிரோஷன் |
| 19 வயதுப்பிரிவு | : செல்வன் இ. வஜிதரன் |

## கல்லூரியின் சிறந்த மென்பந்து துடுப்பாட்ட வீரர்

| | |
|---|---|
| 19 வயதுப் பிரிவு | : செல்வன் த. திப்சன்னா |

## கல்லூரியின் சிறந்த கடினபந்து துடுப்பாட்ட வீரர் விபரம்

| | |
|---|---|
| 13 வயதுப் பிரிவு | : செல்வன் சி. டிலக்சன் |
| 15 வயதுப் பிரிவு | : செல்வன் பா. பிரணவன் |

## கல்லூரியின் சிறந்த சகலதுறை விளையாட்டு வீரர்

செல்வன் அ. உஷானந்

# கல்லூரியின் நிரந்தர நிதியம்

01. **தொழிலதிபர் நெல்லியடி திரு. ந. பாஸ்கரன் புலமைப் பரிசில் நிதியம்.** (கணிதத்துறையில் அதிசிறந்த புள்ளிகள் பெற்ற மாணவருக்குரியது)

02. **லண்டனில் இருக்கும் கல்லூரியின் பழைய மாணவர் திரு. அப்புத்துரை சிவரஞ்சன் புலமைப்பரிசில் நிதியம்.** (வர்த்தகத்துறை, கலைத்துறைகளில் சிறந்த பெறுபேறுபெற்ற மாணவர்களுக்குரியது)

03. **ஆசிரியர் கழகத்தின் புலமைப்பரிசில் நிதியம்** (கலை, வர்த்தகத் துறையில் சிறந்த பெறுபேறுபெற்ற மாணவர்களுக்குரியது)

04. அமரர் தங்கராசா ரமணன் ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம் (க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்குரியது)

05. G.T.Z சேமிப்பிலிருந்து பெறப்பட்ட நிதியம்

06. பாடசாலையின் ஓய்வுபெற்ற கணித ஆசிரியர் திருமதி. செல்லப்பாக்கியம் கிருஷ்ணபிள்ளை அவர்களின் நிதியம். (புலமைப்பரிசில் நிதியம்)

07. லண்டனில் இருக்கும் திரு. வி. எஸ். தங்கவேல் அவர்களால் வழங்கப்பட்ட புலமைப்பரிசில் நிதியம்.

08. கனடாவில் வசிக்கும் கல்லூரியின் பழைய மாணவன் திரு. செல்லையா பாலசுந்தரம் அவர்களின் புலமைப் பரிசில் நிதியம்.

# நன்றிகள்

இன்றைய எமது கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்கு வருகைதந்து சிறப்பித்த அனைத்துப் பிரமுகர்களுக்கும் கல்லூரிச் சமூகத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*This is our school*
*Make me proud of it*
*Make it proud of me*

திரு. க. தருமலிங்கம்
(அதிபர்)